கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 57 இதழ் : 05 அகஸ்ட் 2022 விலை ரூ.25/-




## உழைப்பின் அதிகாரம் ! உலகக் கொண்டாட்டம்!!

— ம.ரா.

# உள்ளடக்கம்


கட்டுரை

| | |
|---|---|
| அ.நாகராசன் | 06 |
| மு. இராமசுவாமி | 15 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் | 38 |
| சிரஞ்சீவி இராஜமோகன் | 56 |

சிறுகதை

| | |
|---|---|
| ப. தனஞ்ஜெயன் | 09 |
| கவிஜி | 27 |
| இலக்கியா நடராஜன் | 31 |
| வாசுதேவன் அருணாசலம் | 45 |
| அகராதி | 51 |
| செ.புனிதஜோதி | 59 |

கவிதை

| | |
|---|---|
| சௌவி | 14 |
| ஆர். வத்ஸலா | 26 |
| அய்யனார் ஈடாடி | 23 |
| ரகுநாத் வ | 37 |
| கி.சரஸ்வதி | 58 |
| ந.சிவநேசன் | 66 |
| இரா. மதிராஜ் | 67 |

| | |
|---|---|
| குறுநாவல் போட்டி | 50 |

கடைசிப் பக்கம்

| | |
|---|---|
| இந்திரா பார்த்தசாரதி | 68 |


**வணக்கம்**

கணையாழி தற்போது மின்னிதழாக மட்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அன்புகூர்ந்து **www.kanaiyazhi.com** அல்லது **magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி அனுப்பலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.



சிறுகதை
வாசுதேவன் அருணாசலம்

# அவர் ஒரு பக்கா பெரியாரிஸ்ட்

“நமக்கு பூர்வீகங்க?” என்று மிகவும் தாழ்ந்த குரலில் பவ்யமாகவே கேட்டார் ரமணன். “நமக்கு பூர்வீகம் ஆப்பிரிக்காங்க!” என்று முகத்தில் சிரிப்போ வெறுப்போ இல்லாமல் அயோத்தியிடமிருந்து வந்த பதிலைக் கேட்டதும் ரமணனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. ரமணனின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்து அடுத்து என்ன கேட்பது, எப்படி உரையாடலைக் கொண்டுசெல்வது என்று திணறித்தான் போனார். சட்டென்று ரம்யா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. “அவர் ஒரு பக்கா பெரியாரிஸ்ட்..” சில வினாடிகளுக்குப்பின் எப்படிப் பேசவேண்டும் என்பதை புரிந்துகொண்டவர்போல், “எனக்கும் பெரியாரை ரொம்ப புடிக்குமுங்க” என்றார் ரமணன். அயோத்தி ரமணனின் நெற்றியைப் பார்த்தார். நெற்றியின் இடது பொட்டிலிருந்து வலது பொட்டுவரை மூன்று திருநீற்றுக் கோடுகள் அழுத்தி என்றுமே அழியவே கூடாது என்பதுபோல் போடப்பட்டிருந்தது. அயோத்தியின் பார்வை தன் நெற்றியில்தான் குவிந்திருக்கிறது என்பதை உணர்ந்த ரமணன், “இது ரம்யா போட்டுவிட்டுச்சுங்க! அவ அம்மா சொன்னான்னு. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் கோவிலுக்கு போகணும்னு பிடிவாதம் பண்ணி, போய்ட்டு வந்தோம்ங்க! ரம்யாவுக்கு பிறந்தநாளுங்க இன்னிக்கு” என்றார். “அப்ப ... பட்டைபோட உங்களுக்கு இஷ்டமில்லிங்க! என்றார் அயோத்தி. அயோத்தியின் வார்த்தைகளில் வெளிப்பட்ட நக்கலைப் புரிந்துகொள்ள ரமணன் சிரமப்பட்டு, கொஞ்சம் தடுமாறித்தான் போனார். “நமக்கு இதுல உடன்பாடு இல்லீங்க! கூப்பிட்டா போவேணுங்க!” என்றார் ரமணன். “இது என்ன சித்தாந்தம்?” ஏளனத்தை முகமெல்லாம் தேக்கிக் கேட்டார் அயோத்தி. முன்புபோல் இல்லாமல், இந்தக் கேள்வியின் நக்கலை ரமணன் சட்டென்று புரிந்துகொண்டார். தன்னுடைய மகளின் திருமணம் மிகவும் முக்கியம் என்பதால் வீண் வாதத்திற்குள் செல்ல வேண்டாம் என்று ரமணன் அமைதியாக இருந்தார் என்பதில்லை. அவர் எப்போதுமே அப்படித்தான். தன்னுடைய நிலைப்பாடு என்ன என்று மற்றவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று என்றுமே முயற்சிக்காதவர். தன்னுடைய

மகள் ரம்யாவே தேர்ந்தெடுத்த மாப்பிள்ளைதான் நவீன், அயோத்தியின் ஒரே மகன். ரம்யாவும் நவீனும் சென்னையில் சோழிங்கநல்லூர் டி.சி.எஸ்ஸில் வேலைசெய்து வருகிறார்கள். ரம்யாவிற்குச் சொந்த ஊர் பொள்ளாச்சி. ரம்யாவின் அப்பா ரமணன். என்.ஜி.பி பொறியியல் கல்லூரியில் மெக்கானிக்கல் துறையில் பேராசிரியர். நவீனுக்குச் சொந்த ஊர் ஈரோடு மொடக்குறிச்சி.நவீனின் அப்பா அயோத்தி மொடக்குறிச்சியில் சர்க்கரை ஆலை வைத்துள்ளார்.

நவீனின் திருமணப் பேச்சை அயோத்தியின் துணைவி ரமா எடுத்தபோது, அயோத்தி நவீனை அழைத்து, “இந்தா பாரு நவீன், நான் ஒரு பக்கா பெரியாரிஸ்ட்னு உனக்கு நல்லாத் தெரியும். நானும் உங்க அம்மாவும் கோயில்லையோ மண்டபத்துலையோ கல்யாணம் பண்ணிக்கல. எங்க கல்யாணம் வித்தியாசமானது. இரண்டுபேருக்கும் பிடிச்சிருந்தது. அவ்வளவுதான். அவுங்க அவுங்க வீட்டுல சொன்னோம். சேர்ந்து வாழ்ந்துவருகிறோம். தாலி கிடையாது. மாலை கிடையாது. ரிஜிஸ்டர்கூட ஆரம்பத்துல்ல பண்ணல. அப்புறமாத்தான் ஃபிரண்ட்ஸ் சொன்னாங்கனு ‘லீகலா’ இருக்கணும்னு பண்ணுனோம்… நாங்க உனக்குப் பொண்ணெல்லாம் பாத்து, இந்தப் பொண்ண கட்டு அந்தப் பொண்ண கட்டுணு சொல்ல மாட்டோம். உனக்கு யார பிடிச்சிருக்கோ பண்ணிக்கோ. எங்ககிட்ட சொல்லணும்னு எந்த அவசியமும் கிடையாது. கூட்டிகிட்டுவந்து பண்ணிவைய்னு சொன்னா, சந்தோஷம். பண்ணிட்டு கூட்டிக்கிட்டு வந்தேனா ரொம்ப சந்தோஷம்.” நவீனுக்கு இப்படியொரு முடிவைக் கேட்டு சந்தோஷப்படுவதா அல்லது வருத்தப்படுவதா என்று தெரியவில்லை. அதுவரை அவன் திருமணத்தைப்பற்றி எந்த முடிவும் செய்திருக்கவுமில்லை. ரம்யாவை சென்னையில் தன்னுடைய அலுவலகத்தில் சந்தித்துப் பழகிவந்தபோது இருவரும் வாழ்க்கையில் இணைய சந்தர்ப்பங்கள் வரும் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. எப்படி ஒரு சாதாரண பழக்கம் சீரிய காதலாக எந்தத் தருணத்தில் மாறியது என்று அவனால் காலத்தை திரும்பிப்பார்த்துக் கண்டுபிடிக்கக்கூட முடியவில்லை. ரம்யாவின் அப்பாவிடம் தனக்குள்ள உரிமையைப் பற்றியும், அவர் தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் பற்றியும், அளவுகடந்த அன்பைப் பற்றியும், நவீனிடத்தில் நிறையவே ரம்யா பகர்ந்திருக்கிறாள். அவள் வீட்டில் தன் விருப்பம்போலத்தான் அவளுடைய திருமணம் நடைபெறும் என்று உறுதிபட நவீனிடத்தில் தெரிவித்திருந்தாள். ஆகையால் இருவரது வீட்டிலிருந்தும் எந்தத் தடையும் இவர்களது திருமணத்திற்கு இருக்கப் போவதில்லை என்பதை இருவருமே அறிந்திருந்தனர். இரண்டு குடும்பங்களும் சந்தித்துப் பேசுவதுதான் பாக்கி. அதுதான் நடந்துகொண்டிருந்தது. நவீன் தன்னுடைய அம்மாவையும் அப்பாவையும் பொள்ளாச்சியிலுள்ள ரம்யா வீட்டிற்கு அழைத்து வந்திருந்தான். இரு குடும்பங்களும் சந்தித்துக்கொண்ட நாள்தான் அது.

வீட்டின் வரவேற்பு அறையில் வலது மூலையில் அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகள்வழியாக முதல் மாடியிலிருக்கும் தன்னுடைய அறைக்கு அயோத்தியை அழைத்துச் செல்ல விரும்பினார் ரமணன். “வாங்க சார், மேல போவோம்” என்றார் அயோத்தியிடம். அயோத்தி வேண்டா வெறுப்பாக இருக்கையிலிருந்து எழுந்து ரமணனைப் பின் தொடர்ந்தார். இருவரும் அங்கிருந்து கிளம்பி மேல்மாடிக்குச் சென்றனர், நவீன்

ரம்யாவை மெல்ல அழைத்தான். "அப்பாட்ட சொல்லலியா? எங்கப்பா ஒரு பக்கா பெரியாரிஸ்ட்னு! இப்படி பட்டைய போட்டுக்கிட்டு... என்ன ரம்யா இது?" என்றான். "நவீ! அம்மா சொன்னாங்கன்னு நான்தான் போட்டுவிட்டேன். நீங்கெல்லாம் வர்றதுக்குள்ள அழிச்சிடலாம்னு நினைச்சிக்கிட்டிருந்தேன். எப்படியோ மறந்துபோய்ட்டேன். டோண்ட் ஒரி! அப்பா எல்லாத்தையும் சமாளிச்சிடுவார்" என்றாள் ரம்யா.

ரமணன் முதல்மாடியிலிருந்த தன்னுடைய அறையின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார். நல்ல வெளிச்சமான, விசாலமான பெரிய அறை. நுழைந்த வாயிலின் எதிர்பக்கச் சுவரில் மோட்டுவளையைத் தொடுமளவிற்கு உயரமான புத்தக மர அலமாரிகள் கண்ணாடி ஜன்னல்களுடன் இருந்தன. அறைக்குள் நுழைந்த அயோத்திக்குச் சற்று வியப்புதான். மெதுவாகப் பின்புறம் திரும்பிப் பார்த்தார். ஒரு நிமிடம் அசந்துபோனார். கைத்தடியில் இரண்டு கைகளையும் மடக்கி ஒருசேரக் குவித்தவாறு பெரியாரின் ஆள் உயரச் சித்திரம் தரையிலிருந்து மூன்றடி உயரத்தில் சுவரில் தங்கநிறப் பட்டை விளிம்போடு தொங்கிக்கொண்டிருந்தது. வியப்பில் விரிந்த கண்களால் சித்திரத்தை அளந்துகொண்டு வாய்பிளந்து நின்றார் அயோத்தி. ஒருகணம் ரமணனைத் திரும்பிப்பார்த்தார். அவருடைய கண்கள் மீண்டும் ரமணனின் நெற்றியில் குவிந்தது. பெரியாரிடம் இவ்வளவு ஈடுபாடுகொண்ட மனிதரால் எப்படி இப்படி நெற்றியில் திருநீற்றுடன் என்ற கேள்விக்கு விடை தெரியாமல் அங்கிருந்து கிளம்பக்கூடாது என்று அயோத்தி முடிவுசெய்ததுபோலிருந்தது. மீண்டுமொருமுறை பெரியாரின் சித்திரத்தைப் பார்த்தார். உயரமான இடத்திலிருந்து பெரியார் தன்மீது ஓர் அற்பப்பார்வையைச் செலுத்துவதுபோல் அயோத்திக்குத் தோன்றியது. "நீயெல்லாம் என்னடா பெரிய பெரியாரிஸ்ட்" என்ற வார்த்தைகள் தன்மீது வந்து விழுவதாகவே அயோத்தி உணர்ந்தார். அங்கிருந்த நான்கு நாற்காலியில் ஒன்றில் அமர்ந்தார். அருகிலிருந்த மற்றொரு நாற்காலியில் ரமணன் அமர்ந்தார். "எனக்கு ஒண்ணுமட்டும் புரியலீங்க!" என்று ஆரம்பித்தார் அயோத்தி. "உங்களுக்கு உண்மையிலேயே பெரியாரைப் புடிக்குமா?" என்றார். "ஆமாங்க! அவரோட கருத்துகள் ஒண்ணு ரெண்டத்தவிர மத்ததெல்லாம் புடிக்குமுங்க" என்றார் ரமணன் ஒரு சிறிய புன்னகையோடு. "சொல்லுறது ஒண்ணாயிருக்கு செய்யுறது ஒண்ணாயிருக்குங்களே! அதுதான் கொஞ்சம் கொழப்புதுங்க!என்றார் அயோத்தி. வந்ததிலிருந்து சிரிப்பைத் தன் முகத்தில் ஓர் ஓரத்திலும்கூட காட்டாத அயோத்தி மென்மையாகப் புன்னகைத்தார். "சிரிச்சிட்டீங்க! என்றார் ரமணன். ரமணனின் அந்த வார்த்தை அயோத்தியின் புன்னகையை மேலும் கொஞ்ச நேரம் முகத்தில் தங்கியிருக்கச் செய்தது. "என்னுடைய நெத்தியில இருக்கிற பட்டையப்பத்திச் சொல்லுறீங்கன்னு நினைக்கிறேன். அது ரம்யாவோட அம்மாவுக்காக போட்டதுங்க. அழிச்சா போயிடுங்க!" என்று தொடர்ந்துகொண்டிருந்த ரமணனை நிறுத்துவதுபோல் அயோத்தி கேட்டார். "உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்குதா? இல்லையா?" சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு பதிலளிக்கத் தொடங்கினார் ரமணன். "மனித வரலாற்றிலேயே மிகச்சிறந்த கண்டுபிடிப்பு கடவுள்தானுங்க. கடவுளக் கண்டுபிடிச்சவன் ஒரு மிகச்சிறந்த சோஷியல் இஞ்சினியருங்க. இன்னிக்கு வரைக்கும் அவனோட அறிவை மிஞ்ச

யாருமில்லை. கடவுள் என்ற ஒன்று இல்லேங்கிறது ஒரு முக்கியமான ரகசியம்ங்க. இந்த ரகசியத்தை அம்பலப்படுத்தக் கூடாதுங்க. கடவுள வைச்சுத்தான் மனுஷன நெறிப்படுத்த முடியும்னு முழுமையா நம்பியவன்தான் அந்த சோஷியல் இஞ்சினியருங்க. அவன் நம்பிக்கையிலெ நெறையபேர் மண்ணெ அள்ளிப் போடுறாங்க. இருந்தாலும் அவன்தான் ஜெயிச்சுக்கிட்டு வர்றானுங்க. என்னப் பொருத்தவரையிலெ கடவுள் இல்லேங்கிற ரகசியத்தை. எதற்காகவும் நாம யாரிடத்திலும் அட்வர்டைஸ் பண்ணக்கூடாதுங்க... ஐ மீண்... யாருட்டையும் சொல்லக்கூடாதுங்க. நெறைய பேர் பயப்படுற ஒரே விசயம் கடவுள்தானுங்க. தவறு செய்யும்போது நிறைய பேர அது மனசளவிலாவது குற்றவாளியாக நெனைக்க வெச்சிடுமுங்க. சுருக்கமாக, ஒரு 'மாரல்' போலீஸ்தான் கடவுளுங்க. கடவுள் இல்லேனு சொல்றவங்கள எனக்குப் புடிக்குமுங்க; கடவுள் இருக்காருனு சொல்றவங்கள எனக்கு ரொம்பப் புடிக்குமுங்க. நமக்கு புடிச்ச சித்தாந்தகளைச் சொல்லி அடுத்தவங்கள புண்படுத்தி நாம என்னத்த சாதிக்கப்போறோமுன்னு எதையும் பெரிசுபடுத்த மாட்டேனுங்க."

அயோத்தியிடமிருந்து எந்த பதிலும் சிறிது நேரம் இல்லை. ரமணன் சொன்ன விசயங்களை தீவிரமாக யோசித்துக்கொண்டிருப்பதுபோல் முகபாவனை இருந்தது. பின் மெதுவாகக் கேட்டார், "நீங்க சொல்லுறது எனக்கு ,கொஞ்சம் புரியலீங்க. கடவுள ரகசியம்னு சொல்லுறது. அப்படீனா பெரியாருக்கு அது தெரியாம போயிடுச்சுங்களா?" ரமணன் சிறிய புன்னகையோடு தொடர்ந்தார், கடவுள் இல்லேங்கற ரகசியத்தை அம்பலப்படுத்தக் கூடாதுதானுங்க... பெரியாரு அப்படி செஞ்சாருன்னா, காரணமிருக்குங்க. சமூக அவலங்கள வெளிச்சம் போட்டுக்காட்ட அந்த ரகசியத்தை அவர் அம்பலப்படுத்த வேண்டியதாயிருச்சுனு நினைக்கிறேனுங்க. மனுஷங்கள நெனைக்கச் சொன்னவருங்க. எல்லாமே அவுங்க அவுங்களோட அனுபவங்க! நாளைக்கு இல்லாத கடவுள்கூட எனக்கு தேவைப்படலாமுங்க... வாழ்க்கை ஒரேமாதிரி அப்படியே போயிடாதுங்க. ஏத்த இறக்கம் வருமுங்க! எந்தப்பிடியும் இல்லாத சூழ்நிலை வந்தா கடவுள்தானுங்க நமக்கு தடி! அது நல்லதுதானுங்க. ஆனா, அதையே பிடிச்சிக்கிட்டு ஆடக்கூடாதுங்க. அதனுடைய பயனை நாம தெரிஞ்சுக்கணுமுங்க" என்று முடித்தார். அமைதியாக அயோத்தி கேட்டுக்கொண்டேயிருந்தார். "கொஞ்சம் யோசிக்கணும்!" என்று தலையை மெல்ல ஆட்டினார் அயோத்தி. அடுத்த கேள்விக்கு அயோத்தி தயாராவதற்குமுன் கீழ்தளத்திலிருந்து ரம்யாவின் குரல் வந்தது. "அப்பா, அம்மா கீழ கூப்பிடுறாங்க!" "இதோ வந்துட்டோம்" என்றார். எழுந்தார் ரமணன். அவரும் அயோத்தியும் அறையைவிட்டுக் கிளம்பினர். அறையைவிட்டு வெளியேறும்முன் மீண்டும் ஒருமுறை பெரியாரின் சித்திரத்தையும் அவர் நிற்பதற்கு ஊன்றியிருந்த தடியையும் பார்த்தார் அயோத்தி. கீழ்தளத்தின் வரவேற்பறைக்கு இருவரும்வந்து இருக்கையில் அமர்ந்தனர். நவீன் அயோத்தியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். பூகம்பத்தின் அதிர்வுகள் எதுவும் எங்கும் தென்படவில்லை. இருந்தாலும் இறுக்கத்திலேயே இருந்தான். அவ்வப்போது ஜாடையாக கண்களால் ரம்யாவைக் கடிந்துகொண்டிருந்தான். ரம்யா "ஒண்ணுமாகாது" என்பதுபோல் அமைதியான சிறுசிறு புன்னகையை மட்டும் பதிலாகத் தந்துகொண்டிருந்தாள்..

ரம்யாவின் அம்மா சுகந்தி வரவேற்பறையிலிருந்த சிறிய சாமி அறையில் விளக்கை ஏற்றிவைத்து, "ஏங்க, சாமி கும்பிட்டுட்டு சாப்பிடுவோம். வாங்க!" என்று ரமணனை அழைத்தார். "இந்தா வந்துட்டேன்" என்று பதில்சொல்லிவிட்டு "இருங்க இத முடிச்சிட்டு வந்துடுறேன். நீங்க உட்கார்ந்திருங்க" என்று அயோத்தியிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு இருக்கையிலிருந்து எழுந்து சாமி அறையை நோக்கி நகர்ந்தார் ரமணன். சுகந்தி, சாமி அறைக்குள் சென்று கற்பூரத்தட்டிலிருந்த திருநீற்றின்மீது நான்கு ஐந்து சிறிய கற்பூர வில்லைகளை குவித்துப் போட்டார். ஒரு கற்பூர வில்லையைக் கையில் பிடித்து எரிந்து கொண்டிருந்த விளக்கிலிருந்து தீயைப் பற்றி தட்டிலிருந்த கற்பூரவில்லைகளோடு சேர்த்தார். வலதுகையில் கற்பூரத்தட்டை எடுத்து அங்கிருந்த சாமி படங்கள் அனைத்திற்கும் தீபாராதனை காட்டினார். கற்பூர ஜுவாலையில் அங்கிருந்த சாமி படங்கள் அனைத்தும் ஜொலித்தன. சுகந்தியின் இடது கையிலிருந்த சிறிய வெண்கலமணி, கையின் மென்மையான அசைவிற்கேற்ப மெல்லியதாக ஒலியை உதறியது. கற்பூரத் தட்டில் ஜுவாலை சற்று அடங்கியிருந்தது. சுகந்தி கற்பூரத்தட்டை ரமணனிடம் நீட்டினார். ரமணன் பவ்யமாக, கூப்பிய கைகளை முழுமையாகப் பிரிக்காமல், மெல்லத் திறந்து ஜுவாலையை பட்டும்படாமலும் ஒற்றியெடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார். தட்டிலிருந்த திருநீற்றை ஜுவாலையில் விரல் படாமல் எடுத்து நெற்றியிலிட்டுத் திரும்பினார். அயோத்தி அருகில் நின்றுகொண்டிருந்தார் கைகளைக் கூப்பியபடி.

vasuaruntamil@gmail.com ■

